# வருடாந்த அறிக்கை 2014



தாவரவியல் பூங்காக்கள் அபிவிருத்தி மற்றும்
நலனோம்புகைக்கான நிதியம்

## தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்

## பேராதனை

## இலங்கை தாவரவியல் பூங்காக்கள் அபிவிருத்தி மற்றும் நலனோம்புகைக்கான நிதியம் வருடாந்த அறிக்கை 2014

இலங்கை தாவரவியல் பூங்காக்களின் மேம்பாட்டுக்காகவும் நலனோம்புகைக்குமான நிதியம் என்ற தலைப்பில் அப்போதைய கமத்தொழில் மற்றும் காணி வனவள அமைச்சராக இருந்தவரினால் முன்வைக்கப்பட்ட 1995-12-15ஆம் திகதிய விஞ்ஞாபனத்தைக் கருத்திற்கொண்டு 1996-02-07 ஆம் திகதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தாவரவியல் பூங்காக்கள் அபிவிருத்தி மற்றும் நலனோம்புகைக்கான நிதியமொன்றைத் தாபிப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டடது.

தாவரவியல் பூங்காக்களுக்கான நுழைவுச் சீட்டு விற்பனை மூலம் கிடைக்கின்ற வருமானத்தில் இருந்து வருடாந்தம் 25 வீதத்தை தாவரவியல் பூங்கா அபிவிருத்தி மற்றும் நலனோம்புகைக்கான பொறுப்பு நிதியத்திற்கு வருமானமொன்றாக என்ற பெயரில் வரவு வைக்கப்படுகின்றது. இதற்காக ஒவ்வொரு வருடத்திலும் திறைசேரியின் அனுமதி அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டின் 2201செலவுத் தலைப்பு (மூலதன மாற்றத்தின்)கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. நிதியத்தின் செலவுக்காக தேவையான நிதி தேவைக்கேற்ப திணைக்களத்தோடு தொடர்புடைய பணத்திலிருந்து பெற்று வருட இறுதியில் அதை ஈடுசெய்யப்படுகின்றது. இதற்கு மேலாக நிதியத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்காக பொருத்தமான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிதியமானது பொறுப்பு சபையொன்றின் மூலம் நிருவகிக்கப்படுவதோடு, அந்த பொறுப்பு சபையின் தலைவராக நிரல் அமைச்சின் செயலாளரும் பொறுப்பு நிதியத்தின் செயலாளராக தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமும் பொறுப்பு நிதியத்தின் அங்கத்துவ உறுப்பினராக பொதுத் திறைசேரியின் வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகமும் கடமையாற்றுகின்றனர்.

**தாவரவியல் பூங்காக்கள் நிதியம்**

1. நிதியத்தின் பெயர் : இலங்கை தாவரவியல் பூங்காக்கள் அபிவிருத்தி செய்வதற்கும் நலனோம்புகைக்குமான பொறுப்பு நிதியம்.

2. தன்மை : தாவரவியல் பூங்கா அபிவிருத்தி நடவடிக்கைகள் தேவையான சந்தர்ப்பங்களில் மீண்டெழும் செலவு நடவடிக்கைகளுக்கான நிதி உதவியை வழங்குதல்.

3. தொடர்புடைய சுற்றுநிருபங்கள் : 1. நிதியத்தை ஆராம்பித்தல் - 1917 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நிதியக் கட்டளைச் சட்டத்திற்கேற்ப
   2. கணக்கு வைத்தல் மற்றும் கணக்கு அறிக்கையிடல் - திறைசேரி சுற்றுநிருபம் 1977 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய 836 ஆம் இலக்க, சுற்றறிக்கை மற்றும் 2006-12-22 ஆம் திகதிய வெளியிடப்பட்ட அரச நிதி சுற்றுநிருபம் PF/423 இற்குஏற்ப
4. ஆரம்பிக்கப்பட்ட திகதி -1996 டிசெம்பர் 20.
5. அலுவலகம் - பேராதனை தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களத்தின் பிரதான அலுவலகம்
6. வங்கி - பேராதனை இலங்கை வங்கி கணக்கு இலக்கம் 0007040848

7. **நிதியத்தின் நோக்கங்கள் –**

- இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தாவரவியல் பூங்காக்கள் பற்றி காணப்படுகின்ற புகழுருவை மேன்மேலும் சிறந்ததாக மாற்றியமைப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்தல்.

- சுற்றாடல் கல்வி மூலிகை பற்றி அறிவைப் பேணி தற்போது காணப்படுகின்ற பாதுகாப்புத் தொடர்பான அர்த்தமுள்ள விடயங்களை நடத்துதல்

- தாவரவியல் பூங்காக்களில் பணியிலுள்ள விஞ்ஞானிகளது விஞ்ஞான அறிவு, செயற்பாடுகள் மற்றும் வசதிகளை மேம்படுத்துதலும் தொடர்புடைய நடவடிக்கைகளுக்குத் தேவையான கருவிகளை கொள்வனவு செய்வதற்குமன நிதி உதவிகளை வழங்குதல்.

- மூலிகை திரட்டல் சம்பந்தமான வளர்ச்சிப் போக்குடைய வேலைத் திட்டமொன்றை ஏற்படுத்துதல்

- தாவரவியல் பூங்காக்கள் பயன்பாட்டுக்காக சுற்றாடல் கல்வி பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் தொழில்நுட்பத் துறைகளில் செயற்பாடுகளை அபிவிருத்ததி செய்வதும் அதற்கு உதவி செய்தலும்

- விஞ்ஞானிகளுக்கும் தாவரவியல் பூங்காக்களுக்கு வருகை தருகின்றவர்களுக்கும் தேவையான வசதிகளை வழங்குவதற்காக தேவையான எந்த சந்தர்ப்பங்களிலும் அவசர நிர்மாணப்பணிகளைப் பொறுப்பேற்றல்

- தேவையான சந்தர்ப்பங்களில் நடைமுறை நிதி ஒதுக்கீடுகளில் குறைபாடுகளை நிவர்த்தி செய்தல்

**2014 ஆம் ஆண்டின் நிதியத்தின் நிதி முன்னேற்றம்**

| | |
|---|---|
| 2014.01.01 திகதிக்கான வரவு மீதி | ரூபா. 109,337,504.86 |
| **<u>கூட்டுக:</u>**<br>2014 வருடத்திற்கான வருமானம் (வரவு) | ரூபா. 106,068,820.00 |
| மொத்தம் | ரூபா. 215,406,324.86 |
| **<u>கழிக்க:</u>** | |
| 2014 வருடத்திற்கான செலவு(பற்று) | ரூபா. 90,994,628.65 |
| 2014.12.31 திகதியன்று உள்ளவாறான திறைசேரி நிலுவை | ரூபா. **<u>124,411,696.21</u>** |
| இந்த நிலுவை பெயரளவு நிலுவை மாத்திரமே | |

**<u>நிதியத்தின் நிதியேற்பாட்டைப் பயன்படுத்தி 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விசேட அபிவிருத்தி செயற்பாடுகள்</u>**

இவ்வருடத்தில் பூங்காவின் கண்கவர் பராமரிப்பு நடவடிக்ககைகளுக்காக தாவரவியல் பூங்கா நிதியத்தின் நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தி தாவரவியல் பூங்கா மிகவும் கவர்ச்சியுள்ள மட்டத்திற்கு வருடத்தில் பேணி வரப்பட்டது.



அரச தாவரவியல் பூங்காவின் ஒரு காட்சி



ஹக்கல தாவரவியல் பூங்காவின் ஒரு காட்சி



அரச பூங்காவின் துணைப் பாதைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளமை.







பேராதெனிய தாவரவியல் பூங்காவின் மந்தைகளுக்கு தங்குவதற்காக நவீன முறையிலமைந்த மந்தை தரிப்பிடமொன்று அமைக்கப்பட்டது.

ரூபா 3.4 மில்லியன் செலவில் பேராதெனிய தாவரவியல் பூங்காவின் மூலிகையக கட்டிடம், கல்விப் பயிற்சி நிலையம், பூச் செய்கை ஆராய்ச்சிக் கட்டிடம் உள்ளிட்ட பிரதான கட்டிடங்களும் திணைக்களத்தின் பிரதான காரியாலய அலுவலக் கட்டிடமும் மின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக மின் பாதுகாப்பு கருவி பொருத்தப்பட்டது.

பேராதெனிய தாவரவியல் பூங்காவை இலங்கை தடாகத்தை புதுப்பிப்பதற்காக நிதியத்திலிருந்து ரூபா 1.04 மில்லியன் செலவு செய்யப்பட்டது. அதற்கமைய இலங்கைத் தடாகம் பின்புற பகுதி சுற்றுலாப் பயணிகளது உளம் கவரும் வகையில் சிறந்த காட்சியமைந்ததாக பேணி வர முடியுமாக இருந்தது.



பேராதனை தாவரவியல் பூங்காவின் லங்கா தடாகம்

- பூங்காவின் அலுவலர்களது வதிகளை மேம்படுத்துவதற்காக நிதியத்திலிருந்து செலவு செய்யப்பட்டது. அதன்கீழ் உத்தியோகபூர்வ வதிவிடங்கள் திருத்தியமைக்கப்பட்டு வசதிகள் மேம்படுத்தப்பட்டன.

- தாவரவியல் பூங்காவை பார்வையிடுவதற்காக வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளது அறிவை விருத்தி செய்வதற்காக மூலிகை பெயர் பட்டியலிடுவது ஆரம்பிக்கப்பட்டது. தாவரவியல் பூங்காவை பார்வையிட வருகின்ற சுற்றலாப் பயணிகளது வழிகாட்டலுக்காக பாதை வழிகாட்டல் பதாகை இடுவது நிதியத்தின் நிதியேற்பாட்டைப் பயன்படுத்தி இவ்வருடத்தில் மேற்கெள்ளப்பட்டது.



பேராதனை தாவரவியல் பூங்காவின் தாவரப் பெயரிடலும் பெயர் பலகைகளும்

**ஹக்கலை தாவரவியல் பூங்காவின் அபிவிருத்தி நடவடிக்கை நிதியத்தின் நிதியேற்பாட்டைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது.**

அதன் படி ஹக்கலை தாவரவியல் பூங்காவை மிகவும் கவர்ச்சிமிக்க பகுதியொன்றாக (லொக் சுபுல் பகுதிக்கு மேற்பகுதி அருகில்) பூங்காவொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஹக்கலை தாவரவியல் பூங்காவில் காட்டு மிருகங்கள் அதிகமாக இருப்பதனால் அந்த மிருகங்களிடமிருந்து இந்த பூங்காவின் பகுதியை பாதுகாப்பதற்காக அப்பகுதியைச் சூழ 900மீற்றர் அளவு “சீன் லிங்ஸ்” மூலமாக சுற்றி வலைத்து பாதுகாப்பு அளிக்கப்பட்டது.



ஹக்கலை தாவரவியல் பூங்காவின் உள்ளக இடை வீதிகளை அபிவிருத்தி செய்து பார்வையிடுவதற்கு வருகின்ற மேம்படுத்துவதற்கும், பூங்காவை கவர்ச்சிமிக்கதாக பராமரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.






ஹம்பாந்தோட்டை தாவரவியல் பூங்காவின் வசதிகளை மேம்படுத்துவதற்காக நிதியத்தின்கீழ் ரூபா 3.2 மில்லியன் செலவில் தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.




ஹம்பாந்தோட்டை  பூங்காவிற்கு கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள்

தாவரவியல் விஞ்ஞான ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக தேசிய மூலிகையகத்திடமிருந்து “Fume Cupboard ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுதோடு, PH மதிப்பீடு மானியொன்றுக்காக கருவிகள் உள்ளிட்ட ஆராய்ச்சி நடவடிக்கைளுக்கான உபகரணங்கள் ரூபா 2 மில்லியன் செலவில்  கொள்வனவு செய்யப்பட்டன.




ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட “பியும் கப்பட்”

இதற்கு மேலதிகமாக ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்குத் தேவையான புத்தகங்களும் கொள்வனவு செய்யப்பட்டன. அதேபோல் வருடத்தினுள் மூலிகை ஆராய்ச்சி தேடல் நடவடிக்கைகளுக்காக கள கடமைகளில்  உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

- அவிசாவளை பூங்காவின் வசதிகளை மேம்படுத்துவதற்காக நிதியத்திலிருந்து நிதியேற்பாடு செய்யப்பட்டது. இந்த பூங்காவை பொது மக்களுக்காக இவ்வருடத்தில் திறந்து வைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஆதலால், வாகனத் தரிப்பிடம் மற்றும் முன்பக்க பிரதான நுழைவாயில் மற்றும் வீதியை நோக்கியுள்ள பகுதி பூங்காவுக்குப் பொருத்தமான வகையில் அழகுபடுத்துவதற்க்கான வேலியொன்றை செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த செயற்பாடு மேல்மாகாண போக்குவரத்து அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, இந்த செயற்பாட்டுக்காக பூங்கா நிதியத்திலிருந்து ரூபா 32 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



- கனேவத்த காட்டு மூலிகை பூங்காவின் மூலிகை தாவரங்கள் மற்றும் ஏனைய தாவரங்களை வளர்க்கும்போது உலர்வலயத்திற்கு நீரை வழங்குவது மிகவும் சிரமமாக உள்ளது. ஆதலால், விற்பனைக்காக தயார் செய்யப்பட்ட மூலிகை கன்றுகளின் உற்பத்தி உலர் வலையத்தில் மிகவும் குறைவாக உள்ளது.

- ஆதலால் வெளியிலிருந்து நீரைப் பெற்றுக் கொள்வதற்காக நான்கு சில்லு டிடாக்டர் ஒன்றும் நீர்தாங்கி ஒன்றும் கொள்வனவு செய்வதற்கு நிதியத்திலிந்து ரூபா 2.5 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டது.



**நிதியத்தின் கீழ் 2014ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட விசேட அபிவிருத்தி நடவடிக்கை பற்றி சுருக்கம்.**

| விடயம் | மதிப்பீடு (ரூபா) | 2014.12.31 திகதியில் மொத்த செலவு (ரூபா) | எஞ்சிய தொகை (ரூபா) |
|---|---|---|---|
| நிதியத்தின் நிருவாக நடவடிக்கைகளுக்கான செலவு | **302,500.00** | **291,383.00** | **11,117.00** |
| தாவரவியல் பூங்காக்களின் வசதிகளை மேம்படுத்துவதற்கான செலவு | **25,522,500.00** | **23,378,506.25** | **2,143,993.75** |
| அரச பூங்காவின் அபிவிருத்திக்கான செலவு | **27,000,000.00** | **25,995,098.29** | **1,004,901.71** |
| ஹக்கல தாவரவியல் பூங்காவின் அபிவிருத்திக்கான செலவு | **12,522,000.00** | **11,340,592.37** | **1,181,407.83** |
| அவிசாவளை ஈரவலய தாவரவியல் பூங்காவின் அபிவிருத்தி செலவு | **32,053,000.00** | **27,834,230.18** | **4,218,769.82** |
| தேசிய மூலிகையக அபிவிருத்தி செலவு | **2,600,000.00** | **2,154,818.56** | **445,181.44** |
| மொத்தம் | **100,000,000.00** | **90,994,628.65** | **9,005,371.55** |

எம்.ஐ.எம். ரபீக்
தலைவர், தாவரவியல் பூங்கா
பொறுப்பு நிதியம்,
செயலாளர், சுற்றுலா மற்றும்
விளையாட்டுத் துறை அமைச்சு

கலாநிதி. டி.எச்.பி.பெரமுனுகம
செயலாளர், தாவரவியல் பூங்கா
பொறுப்பு நிதியம்,
பணிப்பாளர் நாயகம்
தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம்